செ.வெ.எண். 107 நாள்: 13.03.2018

# காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தொகுதி–2 தேர்விற்கான பயிற்சி வகுப்புகள் தொடங்கவுள்ளது

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய (தொகுதி–2)க்கான தேர்வுகள் எதிர்வரும் ஆகஸ்ட் 2018 திங்களில் நடைபெறவுள்ளது. இந்த தேர்வில் கலந்து கொள்பவர்களுக்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு மேலாண்மை நிலையமும், சாணக்யா சிடெக் பயிற்சி நிறுவனமும் இணைந்து முன் அனுபவம் உள்ள ஆசிரியர்களை கொண்டு குறைந்த கட்டணத்தில் நடத்தப்பட உள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினர்களுக்கும், மாற்று திறனாளிகள் மற்றும் இந்த பயிற்சி நிலையத்தில் கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சி பெறும் மாணவ மாணவிகளுக்கும் கட்டணத்தில் சலுகை அளிக்கப்படுகிறது.

இந்த பயிற்சிக்கான விண்ணப்பங்கள் 17.03.2018 (சனிக்கிழமை) முதல் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தால் வழங்கப்படுகிறன்றன. விண்ணப்பங்களை பேரறிஞர் அண்ணா கூட்டுறவு மேலாண்மை நிலைய அலுவலகத்தில் அனைத்து வேலை நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கான பயிற்சி வகுப்புகள் வார விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளிலும், அரசு விடுமுறை நாட்களிலும் நடைபெறவுள்ளது. 17.03.2018 அன்று ஒரு நாள் இலவச அறிமுகப் பயிற்சியும், 18.03.2018 முதல் பயிற்சி வகுப்புகளும் தொடங்கப்பட உள்ளது.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.